பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்—திருக்குறள்.

தொகுதி க. } 1916வரு பிப்ரவரி மீ { பகுதி க.

நமது பத்திரிகை.

"விவேகோதயம்: மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று வெளி வ்ரும் ஒர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை" என்று வாசிக்கும் போதே சிலர்க்கு வியப்பும் நகைப்பும் உண்டாகலாம்.

(1) உலகத்தில் இனிமேல் தானு விவேகம் உதயமாகப் போகிறது? இப்பொழுதுள்ளோர் யாவரும் அவிவேகிகளா? இப்பத்திரிகையால்தான் அறிவு பரவப்போகிறதாக்கும்! (2) அதிலும், கேவலம் மாணவர் சங்கத்தாலா அது ஆகப் போகிறது?" எனச் சிலர் எண்ணலாம். இங்ஙனம் எண்ணுவோர் இருப்பின், அவர்களுக்கு இரண்டொரு மொழி கூறுவாம்:

"அத்திமுதல் எறும்பு ஈருன உயிர் அத்தனையும்" இவ்வுலகில் தோன்றியது முதல், அறிவும் தோன்றியுள்ளது உண்மையே. ஆயினும், அவ்வறிவு மானிட ஜன்மம் படைத்த யாவரிடத்தும் போதிய அளவு நிரம்பியுள்ளதா? உளதாயின்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு."

என்பது போன்ற மகா வாக்கியங்கள் தோன்றக் காரணம் யாது?

பிற பிராணிகளுக்கு உள்ளதுபோல், கேவலம் பஞ்சேந்திரிய உணர்ச்சியும் ஆகாரம், நித்திரை, சந்தோஷம், துக்கம், சந்ததி அபிவிருத்தி செய்தல் முதலியனவும், சிறிது பகுத்தறிவும் மட்டும் இருத்தல் மனிதர்களுக்குப் போதுமோ? இவற்றோடு நூலறிவும் அதனால் அடையும் மெய்யறிவும் பெற்றாலன்றோ மனிதர்கள் மேம்பாடுற்றவ ராவர். மனிதரிடத்துள்ள மிருகத்தன்மையை மாற்றி அவர்களுக்கு மானிடத் தன்மையைக் கொடுக்க வல்லது இவ்விரண்டுமே என்பதைத்

"தொட்டனைத்(து) ஊறும் மணற்கேணி: மாந்தர்க்குக்
கற்றனைத்(து) ஊறும் அறிவு"

"பிறப்(பு) என்னும் பேதைமை நீங்கச் சிறப்(பு)என்னும்
செம்பொருள் காண்ப(து) அறிவு"

என்று பொய்யிலாத் தெய்வப் புலவ ராகிய திருவள்ளுவர் கண்டு கூறியிருப்பதால் உணர்க.

"உப்புக் குவட்டின் மிசைஇருந்(து) உண்ணினும்
இட்(டு) உண்ணுக் கால் அது கூராதாம்";

என்றபடி அறிவு தோன்றி நிரம்பிய உலகத்தில் நாம் இருந்த போதிலும், அவ்வறிவைப் போதிய அளவு பெறுவிடின் யாது பிரயோசனம்? ஆதலால் முற்கூறிய இயற்கை அறிவையும், பிற் கூறிய செயற்கை அறிவையும் இயன்றவாறு புகட்டலையே நன்னோக்கமாகக் கொண்ட பத்திரிகைகளில் இதுவும் ஒன்று எனக் கொள்ளுமாறு அறிஞர்களை வேண்டுகின்றோம். இனி இரண்டாவது விஷயத்தைப் பற்றியும் சிறிது கூறுவோம்.

"மாணவர் செந்தமிழ்ச்சங்கம்" என்றபெயர் கேட்டமாத்திரத்திலேயே மதிவலி படைத்த மாசிலாக் குணத்தோர் மனவெறுப்பெய்தா ரென்பது திண்ணம்!

"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை"யின்

இயல்பைக் குறிக்குமிடத்து, எவ்வயில் புகழுடை ஔவை மூதாட்டியார்,

"கற்றதுகைம் மண்ணளவு கல்லா(து) உலகள(வு) என்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்"

என்று கூறியுள்ளார்.

வாணியே கல்விபயின்று கொண்டிருக்கும் மாணவி என்பது இதனால் புலப்படவில்லையா? ஆகையால் கல்வி பயிலல் இழிவன்றே? ஆதலின், கல்வி பயின்று கொண்டிருக்கும் மாணவர் சங்கத்தினின்றும் இப்பத்திரிகை வெளிவரும் விஷயம் யாவராலும் பெருமையாகவே கொள்ளப்படத் தக்கதாகும்.

அன்றியும், இச்சங்கத்தில் காலாசாலையிற் பயில்வோர்மட்டும் அங்கத்தினராயிராமல் ஸ்ரீமான்களாகிய, மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள், மு. கதிரேசச் செட்டியாரவர்கள், எஸ். சாமிநாத ஐயரவர்கள், பி. பி. சுப்பராமையரவர்கள் முதலிய பல வித்வான்களும், ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மை முதலிய நல்லிசைப் புலமை மெல்லியலாரும் அங்கத்தினராக இருத்தலினாலேயே, இச்சங்கமானது, "கலாசாலையிற் பயில்வோர்," "பெரியோர்" என்ற இரு பொருளுக்கும் இடங்கொடுக்கக்கூடிய "மாணவர்" சப்தத்தை முன் கொண்டு விளங்குவது, உற்றுநோக்கி, மகிழத்தக்க விஷயமாகும்.

இப்பத்திரிகைக்கு "விவேகோதயம்" என்று ஆதியில் நாம் பெயர் கொடுத்த காலத்தில் எமக்கு இவ்வளவு யோசனையும் இருந்ததில்லை. மனிதருக்கு யாதேனும் ஒரு பெயரிடப்பட்டதன் காரணம் அவர்களுள் ஒருவரினின்றும் ஒருவரை அறிதல் முதலிய சௌகரியத்தின் பொருட்டே. அதுபோல் பிற பத்திரிகைகளுக்கு இடப்படாத யாதேனும் ஒரு பெயர் இதற்கு இட்டுத்தீர வேண்டியிருந்ததால் இப் பெயரிடலாயிற்று. இனி இப்பத்திரிகை தமிழ்பேசும் நாடு முழுவதும பரவி, தன் பெயருக்கேற்ப மேலான ஞானத்தையே உதிக்கச் செய்வது பரமகருணாநிதியும், ஞானஸ்வரூபியுமான, முழு முதற் கடவுளின் செயலேயாகும்.

இப்பத்திரிகையின் உன்னோக்கங்களும், அதன் வாயிலாக வெளிவரக்கூடிய விஷயங்களும் நமது விளம்பரப் பத்திரிகை

யின் மூலமாக சிலர் அறிந்திருக்கக்கூடும். ஆயினும் யாவரும் அவற்றை நன்கறிய ஈண்டுச் சுருங்கக் கூறுவோம்:—

இது தன் பெயருக் கேற்ப, தெய்வபக்தி, பாஷாஞானம், தேசப் பக்தி, ராஜபக்தி, நன்னடக்கை முதலியவற்றைப்பற்றிய நல்லறிவை உதிக்கச்செய்து அவற்றை இயன்றவாறு வளர்ப்பதாகும்.

2. ஆங்கிலம், வடமொழி, கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய பாஷைகளில் வல்ல தமிழறிவு மிக்க ஆடவரும் பெண்டிரும் இதற்கு விஷயதானம் செய்வர்.

3. இப் பத்திரிகையில் வரும் விஷயங்கள்; (க) பெரியோர்களின் பிரசங்கங்களும் வியாசங்களும் (உ) நாவல்கள் என்னும் நவீனகங்கள் (ங) நாடகங்கள் (ச) சர்வகலாசாலையாரும் துரைத்தனத்தாரும் தமிழ் சம்பந்தமாகச் செய்துவரும் மாறுதல்களும் அவற்றைப்பற்றிய தமிழகத்தாரின் அபிப்பிராயங்களும், (ரு) நாநா தமிழ்ச் சங்கங்களும மாதந்தோறும் செய்துவரும் வேலைகள் (சு) பிற பாஷைகளிலுள்ள அரிய செய்யுள்நூல் வசனநூல் முதலியவற்றின் மொழி பெயர்ப்பு (எ) தமிழ் நூலாராய்ச்சி (அ) வெளிவராத சில தமிழ்நூல்கள் (கூ) பூகபௌதிக ரசாயன சாஸ்திர நுட்பங்கள (ய) ஒன்றை யொன் றிகழாத சமயக்கொள்கைகள் (கக) புதிய அழகிய இனிய கவிகள (கஉ) விடுகதைகள், விநோதக் கூற்றுகள (கங) சமாசாரக்கொத்து, புத்தகக் குறிப்பு முதலியன.

பழமையும் பெருமையும் படைத்த நமது தாய்மொழியாகிய தமிழ மொழியின் அருமை பெருமை முதலியவற்றை அறியாதார் அறியவும், அம்மொழியில் அபிமானம் அற்றார் அபிமானம உற்றாராகவும், ஆர்வம் உள்ளார், ஆர்வம் மிக்காராகவும், ஆர்வம மிக்கார் மனவெழுச்சி மேலிட்டு மேலும் மேலும் தமிழ் வளர்ச்சி செய்யவும வேண்டியே, இவ்வளவு குறைந்த சந்தாவிற்கு இப்பத்திரிகையை, கரும்பினும் இனிய தமிழ் மொழியை வேம்பெனக் கருதும் இந்நாளில், நாம் காகிதப் பஞ்சத்தைக்கூடக் கருதாமலும், அரும் பெரும் பொருளைத் தரும்பென நினைத்தும் வெளியிட முன வந்தோம்.

1. இப்பத்திரிகையின் கட்டண விவரம் — தபாற்கூலி உட்பட வருஷத்திற்கு ரூ 1—8—0. வெளிநாடுகளுக்குத் தபாற் கூலி உட்பட ரூ 2—4—0. மாணவர்க்கும் பெண்பாலர்க்கும் ரூ 1.

2. விளம்பர விகிதம்:— ஒருபக்கத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ 2—0—0. அரைப் பக்கத்திற்கு ரூ 1—4—0. ஒரு வருஷமேனும் நீடித்துள்ள விளம்பரங்களுக்குச் சகாயஞ் செய்து கொடுக்கப்படும்.

3. விஷய தானஞ் செய்வோருக்கு அறிவிப்பு:—

(க) தங்கள் சாமர்த்திய முழுவதும் காட்டி விட வேண்டுமென்று கருதி, வெகு கஷ்டப்பட்டுத் திரி சொற்களையே பெரிதும் சேர்த்து, வாசிப்போர்க்கு எளிதில் பொருள் விளங்கா வண்ணம் எழுதி, தாமே அகமகிழ்வுறுவோரின் விஷயதானங்கள், எவ்வளவு அருமையாயினும், நமது பத்திரிகையில் வெளியிடப்பட மாட்டா.

(உ) தமதியற்கை வள்ளன்மைக் குணத்தால் இலவசமாகவே விஷயதானஞ் செய்யும் உபகாரிகளுக்கு அவர்கள் எழுதிய விஷயம் வெளிவந்துள்ள சஞ்சிகைகள் இலவசமாக அனுப்பப்படும்.

(ரு) பத்திரிகைக்குப் போதியநிதி ஏற்படும் போது, எவரும் எதிர்பாராமலே எழுதுவோரது விஷய அருமையையும் காலச் செலவையும் சிரமத்தையும்நோக்கிச் சிறிதளவு பொருளுதவிசெய்யப்படும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்ய விரும்புவோரும் இப்பத்திரிகை சம்பந்தமான பிற விஷயங்களை அறிய விரும்புவோரும் அடியிற் கையொப்ப மிட்டவர்க்கே எழுதிக் கொள்க.

எல்லாம் வல்ல ஈசன், தனது திருவருளாலும், தாய்மொழிக்குக் கண்யத்தை உண்டாக்கும் புண்யவான்கள், தமது மொழி, மெய், பொருள் முதலியவற்றாலும் யாமெடுத்த காரியத்தை இனிது நிறைவேற்றுவாராக.

பத்திராதிபர்.

உ

குமரன் துணை.

பத்திரிகா அபிமானிகளுக்கு ஓர் அறிவிப்பு.

மதுரத் தமிழபி மானமிக் குடையீர்!

" கங்கைவாழ் வேணிக் கடவுளும், குமரக்
கடவுளும் அகத்திய ஒருவும்
கலைமகள் வடிவப் புலவரும் மேன்மைக்
கௌரிய வேந்தரும் இருந்து
சங்கமாப் பலகை ஏறியே வளர்த்த
தமிழ்க்கிட மானதென் மதுரை"

என்னும் இத்திருவாலவாயில், தற்காலத்தில் கல்வி வல்லாரால் மட்டும் விரும்பப்படும் செந்தமிழ்ப் பத்திரிகை யன்றி, எளிய இனிய நடையில் ஓர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை இல்லாக் குறையை இயன்றவாறு நீக்க நமது "விவேகோதயம்" நடை பெறும் விஷயம் ஏற்கனவே தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

பலவிதத்திலும், பிரமாதக் கேடுகளை விளைவித்து மிக்க பொருள் நஷ்டத்தையும், உயிர்ச் சேதத்தையும் விளைத்துவரும் இவ் யுத்தகாலத்தில் காகிதபஞ்சம முதலியன உண்டாகி இருப்பதும், அவற்றால் சுமார் 70 வருஷங்களுக்கும் அதிகமாக நடந்து வந்த மான்செஸ்டர், கொரியர் முதலிய பத்திரிகைகள் இங்கிலாந்தில் நின்றுவிட்டதும், பத்திரிகை வாசிப்போர் பலரும் அறிந்ததே.

நம் நாட்டில் ஏற்கனவே வாங்கிக் கட்டிவைக்கப் பட்டிருந்த காகிதங்கள் நல்ல வேளையாய் ஆங்காங்கு சிற்சில கடைகளில் இருந்தும், விலையில் ஒன்றுக் கிரண்டாகவும் அதற்கும் அதிகமாகவும் விற்கப்பட்டு வருவதும் எவரும் அறிந்ததே.

இங்ஙனம் இருந்தும் தாய்மொழிக்குக் கண்யத்தை உண்டாக்கும் புண்யவான்களது ஆதரணையை நம்பித் துணிந்து பகவான் பேரில் பாரத்தைப்போட்டு இப்பத்திரிகையை மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தார் நடத்த முன்வந் திருக்கிறார்கள்.

சௌகரியங்கள் யாவும் குறையற வாய்ந்த முற்காலத்தில கூட, பத்திரிகையை நடத்தல் எளிதான காரியமன்று. ஆதலின் அதி கஷ்டமான இக்காலத்தில் பத்திரிகையின் நிலைமையைப் பற்றிச் சொல்லியா தெரிய வேண்டும்?. ஆயினும் இப்பத்திரிகை யின் அதிபர்

"கைம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாம்செய்வர்"

என்பதற் கேற்ப, பத்திரிகையிடத்தும், சங்கத்தினிடத்தும் தமக்குள்ள இயற்கையன்பு காரணமாக, மாதச் சமபளம் ஏதும் பெறாது அதன் கௌரவ பத்திராதிபராக இருப்பர். இப்பெரும் பேறு இப் பத்திரிகை பெற்றுள்ளதாதலின் இதற்கு ஓர் குறைவும் இராதென் றும், அவரால் ஸ்தாபிக்கப் பெற்றுள்ள "மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம்" "நச்சினார்க்கினியர் புத்தகசாலை" முதலியன வளர்பிறையென்ன நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்ந்து வருவது போல் இப்பத்திரிகையும் தழைத் தோங்கி வருமென்றும் எண்ணுகிறோம். தமிழ் நாட்டுவாசிகள் எலலாரும் வாசித்து அறிவு பெற வேண்டும் என்பது கருதியே இப்பத்திரி கைக்கு அதி சொறப சந்தா ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

இப்பத்திரிகையின் சந்தாதார் தொகை தாமஎ திர்பார்த்திருக் கிறபடி நன்கு பெருகுமாயின் கூடிய சீக்கிரத்தில் இபபொழுது விதித்துள்ள கட்டணத்திற்கே, கூட எட்டுப்பக்கம் கொண்டு இப்பத்திரிகையை நடத்தலாமென்று கூறியிருக்கும் பத்திராதி பரது அன்பும் துணிவும் பாராட்டத் தக்கன.

இப்பத்திரிகையும் அதன் அதிபரும் அதை நடத்தும் சங்க மும் அதனை வாசிப்போரும் நீடூழி வாழ இறைவன் திருவருள் புரிக.

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்.

* இரவல் மணிகள்.

ஞானபோ தனையில், §நாளெலாங் கழிந்ததும்,
மனையா ளையும்தன் வாழ்நாட் சாறுதல்
அளித்திடும் தன்இரு அழகிய மகவையும்
பற்றிய சிந்தனை உற்றவ னாகிக்
குடும்பக் கவலை கொண்டுமா லையில், மனை
நோக்கிக் காலடி போக்கினன் வேதியன்.
அவள், வா யிறபடி யதிலெதிர் கொண்டுசென்
றவனை உள்ளே அழைத்துப் போயினள்.
"நினதுநல் வரவையான் நித்தமும ஆவலாய்
எதிர்பார்த் தகமகிழ் வேன், நின் வரவால்
என்றையி னும்மகிழ் வின்றடை கின்றேன்.
இதற்குக் காரணம் யாதெனில், இன்று
காலை முதல், ஒரு காரியம் பற்றியான்
மிகத்தடு மாறும் அகத்தின னாகிப்
படுசோ தனைக்குட் பட்டிருக் கின்றேன்.
ஒருமுடி வதற்குநீ உரைத்திஇப் பொழுது:
சிலஆண் டுகட்குமுன் சிலமணி களைஎன்
னிடத்துஓர் நண்பன் கொடுத்துப் போயினன்.
அரிய விலைஉயர் அழகிய மணிஅவை.
எனினும்இந் நண்பன் என்னிடம் அவற்றை
அளித்ததன் பின்னர், அவைகளுக் காக
வரவும் இல்லை; ஆள் வரவிட வும்இலை.
ஆயினும், அவற்றை அவன்என் னிடமே
இத்தனை நெடுநாள் வைத்திருந் ததனால்
இன்றவன் திடீரென எய்தித் தான்முன்
கொடுத்தஅம் மணிகளை எடுத்துச் செல்ல
வந்திருப் பது, என் புந்தியில் அநேகமாய்த்
தவறே என்னத் தான்படு கின்றது.
நின்கருத் தென்னை? என்மன தாரவும்

---

*இது "The Lent Jewels" என்ற ஓர் ஆங்கிலச் செய்யுளின் தமிழ் மொழி பெயர்ப்பு. §நாள்—பகற்பொழுது.

அனுவள வாயினும் முனுமுனுப் பின்றியும்
அவற்றைத் திரும்பவும் அவற்களிக் கிறதா?
"எனக்கே உரிமை. என்ன"தென் றெண்ணிநான்
இருக்கும்அம் மணிகளை இழந்துபோய் விடுவதா?
மொழிக" எனஅவள் முக்கிக் கொண்டனள்.
"என்னே ஐயம் இதிலிருக் கின்றது?
நினதுஅந் தரங்க மனமே செய்து
தீரவேண் டியதொரே காரியம் இது என
அவசியம் நினக்குநன் கறிவுறுத் திடுமே!
இரவ லாக ஈந்த பொருள்களைத்
திருமபப் பெறப்பாத் தியதைஉண் டாதலால்,
எவ்வகை அதிர்ப்தியும் இன்றி அவற்றைத்
திரும்பவும் கொடுத்துத் தீரவே வேண்டும.
இஃதல் லாமலும, இததுணை நெடுநாள்
அவைகளை நாம்நன் கனுபவித் திடவிட்
டிருந்ததி னுந்தவ றேதும்நாம் காண்பதற்
கிலேயே?" என்ன இயம்பினன் வேதியன்.
மற்றிவை கேட்டு"நீ உற்றதே உரைத்தனை.
இன்றும், இனிநாம் என்றென் றைக்கும்
உற்றதை யேசெய ஒப்புவோ மாக."
என்றவள் கூறி, எழுந்து,உட் புறத்துள
அறைக்குள் அவனை அழைத்துச் சென்றனள்;
ஆங்கிரு குழந்தைகள் *அறஉடல் வெளுத்தொரே
படுக்கையிற் கிடத்தப் பட்டிருந் ததைஅவள்
அவற்குக் காட்டினள். அப்பொழுது உணர்ந்தனன்
இறைவன் தழக்குமுன் இரவலாய் ஈந்து
மற்றுங் கொண்டஅம் மணி,இம் மணியென.

ம. கோபாலகிருஷ்ணையர்,
மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து
அக்கிராசனதிபதி.

---

*அற-முற்றிலும்.

உ

ஸ்ரீ மீனாக்ஷி துணை.

கமலாவதி.

ஓர் தமிழ் நாடகம்.

நாடக பாத்திரங்கள்.

வசந்தசேனன் ...	... மாளவ நாட்டரசன்.
ஸ்ரீதரன் ...	... வசந்தசேனன் புதல்வன்.
ஜயகேசரி ...	... ஸ்ரீதரன் நண்பன்.
கோரசேனன் ...	... வசந்தசேனன் சகோதரியினது புதல்வன்.
விக்கிரமகேது ...	... கேகய நாட்டரசன்.
சத்தியானந்தன் ...	... கேகய நாட்டமைச்சன்.
வீரன் ...	... கோரசேனனது வேலையாள்.
சோமுதீக்ஷிதர் ...	... கேகய நாட்டுப் பிராமணர்கள்.
அப்புசாஸ்திரி ...	... கேகய நாட்டுப் பிராமணர்கள்.
மோஹனை ...	... வசந்தசேனன் மனைவி.
குணமாலிகை ...	... மோஹனையின் புதல்வி. (ஜயகேசரியின் மனைவி.)
ஞானவல்லி ...	... விக்கிரமகேதுவின் மனைவி.
கமலாவதி ...	... விக்கிரமகேதுவின் புதல்வி. (ஸ்ரீதரன் மனைவி.)
நீலா ...	... கமலாவதியின் தோழி.

சேவகர்கள், படைவீரர்கள், தாதிகள் முதலானவர்கள்.

நாடகம் நிகழ்விடம்:— பெரும்பான்மை மாளவ நாட்டிலும், சிறுபான்மை கேகய நாட்டிலும், மாளவ நாட்டையடுத்த வனத்திலுமாம்.

கமலாவதி.

அங்கம்—1

காட்சி—1.

இடம்—மோஹனாவின் அறை. காலம்—மாலை.

மோ. [உலாவிக்கொண்டே தனக்குள்]
என் இன்னும் கொரேசேனன் வரவில்லை? அப்பொழுதே வருவதாகச் சொன்னவன் இது வரையில் வாராததன் காரணம் இன்னதென்று தெரியவில்லையே! இருக்கட்டும், —இன்னும் சற்று நேரம் பார்க்கின்றேன். (சற்று தாமதித்து) — உண்மையா யிருக்குமா? — கொரேசேனன் சொல்லுகின்றபடி — ஸ்ரீதரனால் எனக்கு அவ்வளவு இடையூறு இராதென்று நினைக்கின்றேன்.

[ஒரு சேவகன் பிரவேசிக்கிறான்]

சே. அம்மா, கொரேசேனர் வந்திருக்கிறாருங்க, உத்தரவுக்குக் காத்திருக்காங்க.

மோ. நல்லது, வரச்சொல். [போகிறான்]
கொரேசேனனும் வந்துவிட்டான். அவனுடன் யோசனை செய்து எதாவது ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும்.

[கொரேசேனன் பிரவேசிக்கிறான்.]

கொ. அம்மணி நமஸ்கரிக்கின்றேன்.

மோ. (தலையை அசைத்து) சரி, ஏது உமக்கு இவ்வளவு தாமதம்?

கொ. மஹாராஜா அவர்கள் தங்கள் புதல்வி குணமாலிகையின் விவாஹ விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அது தான் தாமதத்திற்குக் காரணம்.

மோ. மஹாராஜா, என்னுடனும் இன்றைத்தினம் குணமாலிகையின் விவாஹ விஷயத்தைப் பற்றித்தான் பேசினார். அவர்க்குக் குணமாலிகையை ஜயகேசரிக்கு விவாஹம் செய்து கொடுக்க விருப்பம்.

கோ. தங்களுக்கும் இது சம்மதம் தானே?

மோ. அங்ஙனம் செய்வதில் தவறென்ன?

கோ. (தலையை அசைத்து முகத்தைத் திருப்பிக் கொண்டு) சரி!—

மோ. ஏன்! உமது அபிப்பிராய மென்ன?

கோ என் அபிப்பிராயம் எதற்கு?

மோ. என்ன இப்படிச் சொல்லுகிறீர்! எனக்கு உம்மைத் தவிர உதவி செய்ய யார் இருக்கிறார்கள்!

கோ. அம்மணி! ஒரே வார்த்தை. நன்றாய் யோசிக்காமல் ஒரு காரியத்திலும் பிரவேசிக்கக் கூடாது. இது தான் எனக்குத் தெரிந்தது. பிறகு தங்களிஷ்டம்.

மோ. என்ன? நீர் சொல்வது இன்ன தென்றே புலப்படவில்லை எனக்கு. உமது அபிப்பிராயத்தை வெளியிட்டுச் சொல்லுமே.

கோ. அம்மணி! தாம் எப்பொழுதும் யாதொரு கவலையுமற்று வாழவேண்டுமென்பதே என் கருத்தும் விருப்பமும்.

மோ. அது எனக்குத் தெரியாத விஷயமா தானே. ஏது இன்றை யதினம் ஒரு மாதிரியாகப் பேசுகின்றீர்? நான் கேட்பதை விட்டுவிட்டு ஏதேதோ பேசுகின்றீரே?

கோ. தாங்களோ குணமாலிகையை ஜயகேசரிக்கு விவாஹம் செய்து கொடுப்பதாக நிச்சயம் செய்துவிட்டீர்கள்! என் அபிப்பிராயத்தைக் கேட்பானேன் பிறகு?

மோ உண்மைதான். என் அபிப்பிராயம் அப்படி. உமது அபிப்பிராயத்தையும் நானறியக்கூடாதா?

கோ. அம்மணி! நான் சொல்லுவதைச் சற்றுக் கவனியுங்கள். நான் ஒருவரிடம் ஒருவிதமாகவும் இன்னொருவரிடத்தில் ஒரு மாதிரியாகவும் நடப்பவனல்லன். எப்போதும் எல்லோரிடத்திலும் ஒரே மாதிரியாகத் தானிருப்பேன். ஆனால், எவன் ஒருவன் நியாயம் தவறி நடக்கின்றானோ, அவன் சமீபத்திலும் நான் செல்லமாட்டேன். தாங்

கள் இப்போதிருக்கும் நிலைமையைப் பார்த்தால் எனக்கு மிகவும் பரிதாபமாக இருக்கின்றது. ஸ்ரீதரன் விஷயத்தில் தாங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று, நான் அநேகந் தடவை தங்களை வற்புறுத்தினேனே?— கொஞ்சத்தில் ஒப்புக் கொண்டீர்களா? ரூபித்ததின் பேரில் தானே ஒத்துக் கொண்டீர்கள்! இப்பொழுது,மறுபடியும் அந்த ஸ்ரீதரனுக்கு மிகவும் ஆப்தனாகிய ஜெயகேசரிக்கே குணமாலிகையை விவாஹம் செய்து கொடுக்க நிச்சயித்து விட்டீர்களே? சமயம் எப்படி நேருமோ யார் கண்டார்கள்? நான இனித் தங்களுக்குச் சொல்ல வேண்டியது என்ன இருக்கின்றது? தங்களுக்கு என் வார்த்தையின் உண்மை இப்பொழுது தெரியாது. நான் நிச்சயமாகச் சொல்லுகின்றேன். ஜயகேசரிக்கு நமது குணமாலிகையை மணஞ் செய்வித்தால், கட்டாயம் தங்களுக்குக் கெடுதியே சம்பவிக்கும். தாங்கள் அடையப்போகும் நன்மை ஒன்றுமில்லை. உலக வழக்கத்தைத் தங்களுககு எடுத்துச் சொன்னேனே தவிர வேறொன்று மில்லை. அப்புறம் தங்களிஷ்டம்.

மோ. நீர் சொல்வது உண்மை தான். "தாயும் பிள்ளையு மானாலும், வாயும் வயிறும் வேறு." ஒவ்வொருவருக்கும் அவரவர் சுகமே பெரிது. இருந்தாலும், ஜயகேசரிக்கு நமது குணமாலிகையை மணஞ் செய்வித்தால் கெடுதி தான் சம்பவிக்கும் என்பது என்ன நிச்சயம்? ஸ்ரீதரனும் ஜயகேசரியும் மிகவும ஆப்தர்களானதினாலே, ஒரு வேளை, ஜயகேசரியால் ஸ்ரீதரன் நல்வழிப் பட்டானாகாதா?

கோ. அம்மணி! இவ்வளவு பேசுகின்றீர்களே! கொஞ்சக் காலத்திறகுள் தெய்வ கிருபையால் தாங்கள் ஒரு புதல்வனையடைந்தால், என்ன செய்வீர்கள்? பிறகு ஸ்ரீதரன் கையை எதிர் பார்ப்பதைவிட, இப்பொழுதே அதற்கு வேண்டிய உபாயத்தைத் தேடுதல் நலமல்லவா? நாம் இரண்டு காரியம் உடனே செய்ய வேண்டும்; ஸ்ரீதரன்

மறுபடியும் இந்நாட்டிற் பிரவேசிக்காமலும், ஜயகே சரிக்கு குணமாலிகையை மஹாராஜா மணஞ்செய்விக் காமலும் உடனே முயற்சி செய்ய வேண்டியது.

மோ. (சற்றுத் தாமதித்து) கோரேசனரே! எப்படியிருந் தாலும் நீர் ஆண்பிள்ளை ஆண்பிள்ளைதான். நான்பெண் பிள்ளை பெண்பிள்ளை தான். "வெள்ளம் வருமுன் அணை போட வேண்டும்." தக்க முயற்சியை இப் பொழுதே செய்தல் நலம். தாம் சொல்வது வாஸ்தவம். இருந்தாலும் நான் இன்னும் இதைப் பற்றி நன்றாய் யோசனை செய்து சொல்லுகின்றேன்.

கோ. அம்மணி! நான் இனித் தங்களுக்குச் சொல்ல வேண்டி யது ஒன்று மில்லை. ஆனால், ஓர் விஷயம் மாத்திரம் தெரிவிக்க விரும்புகின்றேன் தங்களிடம். அதாவது இப்பொழுது "கையால் எளிதில் கிள்ளி யெறியக் கூடி யதைச் சும்மா விட்டு விட்டால் பிறகு கோடரி கொண் டெறிவதும் கஷ்டமாகும்" என்பதே.

மோ. கோரேசனரே! எல்லாம் என் நன்மையைக் கருதித் தானே சொல்லுகின்றீர்? நீர் சொல்லுகின்றபடியே நடந்து கொள்ளுகின்றேன். இந் நன்றியை நான் என் றும் மறவேன்.

கோ. அம்மணி! ஏதோ எனக்குத் தெரிந்ததை நான் சொன் னேன். இது ஒரு நன்றியாகுமா? அம்மணி நான் ஒரு விஷயம் சொல்ல மறந்து விட்டேன். நமமுடைய அந்தஸ்துக் கேற்ற ஓர் ராஜகுமாரனுக்கு நமது குண மாலிகையை மணஞ் செய்து கொடுக்க வேண்டியிருக்க, தங்களுக்கு ஊழியம செய்பவனுடைய புதல்வன் ஜெய கேசரிக்கா மணஞ் செய்து கொடுப்பது? நீங்களே நன் றாக யோசித்துப் பாருங்கள்.

மோ. தாம் சொல்வது வாஸ்தவந்தான்.

கொ. அம்மணி! நான் இங்கு வந்து அதிக நாழிகை யாகிவிட் டது! சென்று வருகின்றேன். விடையளிக்க வேண்டும்.

மோ. ஆஹா! அப்படியே. [போகிறான்]

இவன் சொல்வதெல்லாம் வாஸ்தவந் தான. இவன் சொல்லுகின்றபடி நான் கேட்கவேண்டியதும் அவசியந் தான். ஒரு ராஜகுமாரனுக்கே மணஞ்செய்து கொடுக்க வேண்டிய குணமாலிகையை, கேவலம் ஊழியனுகிய இந்த ஜயசேனனது புதல்வனுக்கு மணஞ் செய்விக்க என் பிராணநாதர் இசைந்தது ஸ்ரீதரனுடைய ஏற்பாடே என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இந்தக் கொடூர சேனனைக் கொண்டே எனக்கு வேண்டிய உதவிகளை யெல்லாம் செய்து கொள்கின்றேன் இவன்இல்லாவிடில் என்பாடு கஷ்டமாகவே முடியும் எல்லாவற்றிற்கும் ஜகதீசன் இருக்கிறார். [போகிறாள்.]

காட்சி முடிகின்றது.

(இன்னும் வரும்)

K. வேங்கடராமையர்.

---

*சாணக்ய சாகஸம்

என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

பாடலிபுர மன்னனுகிய ஸர்வார்த்தஸித்தி ராஜனுக்கு ஸுநந் தாதேவி என்ற பட்டமகிஷியும், முராதேவி என்ற போக ஸ்திரீயும் உண்டு. முராதேவிக்கு மௌர்யன் என்ற ஓர் சற்புத்திரன் பிறந்தான். பட்டத்தரசியாகிய் சுநந்தைக்கு நந்தன், சுநந்தன், உபநந்தன், பிரநந்தன், லோகநந்தன், குருநந்தன், பிரியநந்தன், மித்திர நந்தன், விநந்தன் என்னும் ஒன்பது குமாரர்கள் பிறந்தனர். மௌர்

---

*இச்சரித்திர நாவலின் இரண்டாம் பாகம் நமது "விவேகோதய"த்தில் இனி விரிவாக வெளிவருமாதலின், கதைத் தொடர்ச்சியை நமது நேயர்கள் அறியுமாறு முதற் பாகத்தில் அடங்கிய கதை இதனடியில் சுருங்கக் கூறப்பட்டுள்ளதென அறிக. சுமார் 200 பக்கங்கள் கொண்ட முதற் பாகத்தின் விலை ரூபாய் ஒன்றே. சொற்பப் பிரதிகளே உள்ளன. வேண்டுவோர் நமக்கெழுதிப் பெற்றுக் கொள்க. பத்திராதிபர்.

யன் தக்க வயது அடைந்ததும், அரசன், சிம்மாசன மேறுவ தொன்று தவிர, மற்ற சர்வாதிகாரங்களேயும் அவனிடம் ஒப்பு வித்தான். மௌர்யனும சாவார்த்தஸித்திக்கு எவ்வகைச் சிரமமும் இல்லாமல் ராஜ்யவிசாரணையைத தானே விசாரித்தும் நவநந்தர்களிடம் மிக்க விசுவாசத்துடனும் நடந்து வந்தான்.

ஸர்வார்த்தஸித்திக்கு ராக்ஷஸன் என்ற ஓர் மந்திரி உண்டு. அவனிடம் நவநந்தர்கள் ஒப்புவிக்கப்பட்டனர். அவனே அரசர்க்குரிய எவ்வகைக் கல்வியும் அவர்களுக்குக் கற்பித்து வந்தவன். தக்க வயது வந்ததும் மூத்தவனான நந்தனுக்கு இளவரசுப் பட்டங் கட்டப்பட்டது.

மௌர்யனுக்கு நூறு பிள்ளைகள் தோன்றினர். இவர்களில் சந்திரகுப்தன் என்பவன் கடைசிப் புதல்வன். இவனே நம் கதாநாயகன். மௌர்யனுடைய புத்திரர்கள் மௌர்யர் என்றும், நந்தனும் அவனது சகோதரர்களும் நவநந்தர்களென்றும், அழைக்கப்பட்டனர். வித்தை புத்தி சௌரியங்களில் ஒப்புயர்வற்றவர்களாய் விளங்கிய மௌர்யாது ஆக்கத்தைப் பொறுத நவநந்தர்கள், துரியோதனுதியர் பாண்டவர்களைப் பகைத்ததுபோல், அந்தரங்கத்தில் அவர்களிடம் பகை கொள்ளலாயினர் காலாந்தரத்தில மௌர்யர் தமது அரசாட்சியையும் அபகரித்து விடுவாரகளென் றஞ்சி அவர்களை ஒழித்துவிட நந்தர்கள் வழிதேடினுர்கள். ராக்ஷஸன் அவர்களை நல்வழிப்படுத்த எவ்வளவோ முயன்றும் முடியாமற் போயிற்று.

இங்ஙனமிருக்கையில், கங்கா ஸ்நாநம் செய்யும் பொருட்டு ஸர்வார்த்தஸித்தி தன் இரு மனைவிமார்களுடனும் பிரயாகைக்குப் பிரயாணமாயினன். ராக்ஷஸனும் அரசனுக்குச் சகாயமாக நந்தர்களால் அனுப்பப்பட்டான் மௌர்யரை ஒழிக்க இதுவே தக்க சமயமென நினைத்து நவநந்தர்கள் மௌர்யனையும் அவனது குமாரர்களையும் வேட்டைக் கழைத்துச் சென்றனர். வேட்டையாடியதும் அவர்கள் ஓர் உத்யானவனத்தில் வந்திறங்கினர். மௌர்யாகளைக் கொல்வதற்கென்று அவ்வுத்தியானவனத்தில் நந்தர்களால் ஒருவீடும் அதன்கீழ் நிலமாளிகையுங் கட்டப்பட்டிருந்தன. இவ்

விஷயம் மௌர்யர்க்குத தெரியவே தெரியாது. இந்நிலமாளிகையில் நூற்றொன்பது பேர்களும் சாப்பிட உட்கார்ந்தார்கள். நவநந்தர்கள் சமையற்காரர்களைக் கண்ஜாடையால் வெளியில அனுப்பிவிட்டு "ஏன் சரிவரப் பரிமாறவில்லை?" என்று கோபிப்பவர்கள் போல் ஒருவர்பின ஒருவராய் வெளியே வந்து நிலமாளிகைக் கதவைப் பூட்டி முத்திரையிட்டு "இனறுடன் நமது சத்துருக்கள் நாசம் அடைநதனர" என்று சந்தோஷமாய் ஊர் போய்ச் சேர்ந்தார்கள். அடைபட்ட மௌர்யனும் அவனது புத்திரர்களும் துக்கத்தாலும், பசியாலும், தாகத்தாலும் நாளொன்றுக்கு எட்டுப்பேர், பத்துப் பேர் வீதம் மடிந்தார்கள். சந்திரகுப்தன் மட்டும் குற்றுயிராயிருந்தான். இசசமாசாரம் வேலையாட்களால் நந்தர்களுக் கறிவிக்கப்பட்டதும், அவனை அவர்கள் சிறைசசாலையில வேறு ஒரு இடத்தில சிற்சில காரணங்களை உத்தேசிதது வைத்தாரகள.

நந்தர்கள், மௌாயனும் அவன் குமாரர்களும் தமக்குத் தாமே ஆபத்து விளைவித்துக் கொண்டு உயிரிழந்தார்களென்று யாவர்க்குந் தெரியப்படுத்தி அவ்வாறே தந்தைக்கும கடிதமெழுதி விட்டார்கள்.

இதற்குள் முராதேவி பிரயாகையில் பாகிரதியில் தன் சரீரத்தை ஒப்புவித்துத் தன்யளாயினள். ஆகவே, முராதேவியின் வம்சத்திற்குச் சந்திரகுப்தன் ஒருவனே உயிருட னிருந்தவன்.

கங்காஸ்நானம் செய்தபிறகு அரசன் பாடலீபுரம் வந்துசேர்ந்தான். வந்ததும், நந்தர்களின் கபடமும, கொடுஞ்செய்கையும அரசன் காதில் எட்டவே அவன் கொண்ட கோபத்திற் களவில்லை. ராக்ஷஸன் தனது சமயோசித வார்த்தைகளால் அரசனைத் தேற்ற, அவன் ஒன்றுமறியாதவன்போல் தன் பிள்ளைகளிடம் நடந்து வந்தான். நிற்க,

பர்வதேசன் என்ற அரசன், பிறதேசங்களில் நடக்கும் விசேஷங்களை அறிந்துவரும்படி தான் அனுப்பிய ஒற்றாகள் மூலமாக, மௌர்யர் வதத்தையும், சந்திரகுப்தன் மட்டும் உயிருடனிருக்கும் விஷயத்தையும் அறியலாயினன். அவன் பாடலீபுரத்தின் வர்த்தமானங்களை இன்னும் நன்றாக அறியவும், அங்குள்ள மந்திரிமார்க

வின் புத்திசாதுரியத்தைத் தெரிந்துகொள்ளவும் ஓர் உபாயம் செய்து பார்க்குமாறு தன் மந்திரியான சபரவர்மனுக்குக் கட்டளையிட்டான்.

சபரவர்மன் சதுரர்களான சில சிற்பிகளை வரவழைத்து மாயச் சிங்கம் அடங்கிய ஒருகூடு செய்வித்தான். அக்கூட்டை அவன் புத்திமான்களான சிலரிடம் தந்து அச்சிங்கத்தைப் பற்றிய இரகசியங்களை அவர்களுக்குத் தெரிவித்து, அவர்களை நோக்கி "இக்கூட்டை பாடலீபுர அரசனது கொலுமண்டபத்துக்கு அருகில் இறக்குங்கள். நான் சொல்லித் தருவதுபோல சொல்லிக்கொண்டு, வீதிகள் தோறும் செல்லுங்கள். இதன் உபாயங்களை அறிபவர் இன்னார் என்பதையும், அங்கு அச்சமயம் நடக்கும் விசேஷ சமாசாரங்கள் இன்னின்ன என்பதையும் தந்திரமாய் அறிந்து வந்து சொல்லுங்கள்" என்று உரைத்து அவர்களுக்கு ஏதோ அதிரகசியமாய்ச் சில கூறி அனுப்பினான். அவர்களும் அக்கூட்டுடன் பாடலீபுரத்திற்குப் பயணமாயினர்.

இதற்குள் லம்பாக தேசாதிபதியாகிய கிரிவர்மன் போர்க்கோலம் பூண்டு வருஞ் செய்தி ஒற்றர்கள் மூலமாகப் பருவதேசன் அறிந்து, கிரிவர்மனது வருகையையும், அவனது யுத்த முயற்சியையும் விவரமாக அறிந்துவர மறுபடியும் அச்சாரர்களையே போக்கினான். நிற்க.

பர்வதேசனது நகரத்திலிருந்து புறப்பட்ட ஆட்கள் சில தினங்களில் தமது சிங்கக்கூட்டுடன் பாடலீபுரம் வந்து சேர்ந்து அரசனது ஆஸ்தான வாசலுக் கெதிரே அதனை இறக்கினார்கள். அவர்களிற் சிலர் அங்கிருந்து புறப்பட்டுத் தெருக்கள் தோறும் வாத்தியகோஷத்துடன் சென்று, "இந்நகரில் புத்திமான்கள் யாரேனும் இருப்பின், அமாநுஷகிருதமான இக்கூண்டைச் சிதையாமல் இதனுள்ளிருக்கும் சிங்கத்தை வெளிப்படுத்துக. எவருமில்லையேல் எங்கும் செய்து வருவது போல எங்களுக்குத் தக்க வெகுமதி அளித்து வேற்றூர் செல்ல உத்தரவிடுக" என்று கூவிச் சென்றனர். நவநந்தர்கட்கு இச்செய்தி எட்டவே, அவர்கள் முதலில் தமது மந்திரிமார்களை உண்மை யறிந்து வருமாறு அனுப்பினர். அவர்களால் அச்சிங்கத்தைப் பற்றிய ரகஸ்யம் ஏதும் அறியக்கூடவில்லை. உட

னே நந்தர்கள் ஊரெங்கும் பறை அறைவித்து உண்மை அறிந்து உரைப்போர்க்கு வெகுமதி அளிக்கப்படும் என்று விளம்பரப் படுத்தினர் பலர் வந்து பார்த்தனர். ஆயினும் பயன்படவில்லை. இதற்குள் சிறையிலிருந்து வருந்தும் சந்திரகுப்தனுக்கு எவ்வாறோ இச்செய்தி எட்ட, அவன் "என்ன! இவ்வளவு பெரிய பட்டணத்தில் இச்சாமானிய விஷயம் அறிய எவருமா இல்லாமற் போனார்கள்! ஆச்சரியம்! ஆச்சரியம்!!" என்று பரிகஸித்துரைத்ததைச் சில காவலாட்கள் கேட்டனர். உடனே அவர்கள் மூலமாய் அரசனது ஆட்கள் இஃதறிந்து அரசனிடம் சென்று "ஸ்வாமிகாள்! சிறையில் அடைபட்டவருள் ஒருவன் "இவ்வளவு பெரிய ஊரில் அறிவாளிகள் ஒருவரும் இலலாமற் போனது வியப்பையும் வெட்கத்தையும் விளைவிக்கிறது" என்றானாம். அவன் சொல்வதைப் பார்த்தால ஒருவேளை இக்கூண்டுப் பரீக்ஷை அவனால் ஆனாலும் ஆகலாம் என்று தோன்றுகிறது. நம் பட்டணத்திலுள்ள எவருமே எவன என்று கூடக் கேட்கவில்லையே! என்ன ஆச்சரியம் பாருங்கள்!" என்றனர்.

நந்தர்கள் இங்ஙனம் பரிகஸித்துரைத்தவன் இன்னான் என்று கூட அறிந்து கொள்ளாமல், "அவனை உடனே சிறையினின்றும் அழைத்து வந்து இக்கூண்டைப் பரிசோதிக்கச் செய்து நமக்கு முடிவை வந்து தெரிவியுங்கள்" என்று கட்டளையிட்டு அந்தப்புரம் சென்றனர். நந்தர்கள் உத்தரவின்படி சந்திரகுப்தன் சிறையினின்றும் வெளிவந்து கூட்டண்டை சென்று அக்கூட்டையும் அதில் உள்ள சிங்கத்தையும் அது பாயும் பாய்ச்சல், சேஷ்டை முதலியவற்றையும் கண்டான். அவன் மதிநுட்பம் ஆகையால் சிறிதுநேரம் நன்றாக அவற்றைக் கவனித்துப் பார்த்து, யானைக்குட்டி, காந்தம் முதலியவற்றின் உதவியால் சிங்கததைப் பற்றிய ரகஸ்யங்களை நன்கறிந்து உரைத்து பர்வதேசன் ஆட்களை நாணித் தலைகவிழ்ந்து ஓடும்படிச் செய்தனன்

இவாகளுக்கு நந்தர்களாலும ராக்ஷஸனாலும், "ராஜசபையில் அஞ்சாது பொய் கூறியதன்" நிமித்தம், கடுந்தண்டனை கிடைக்கக்கூடுமே என்ற பரிதாபமும், இவ்வாட்களாலேயே தனக்குச் சிறையினின்றும் இப்பொழுது மீட்சியும், இம்மீட்சியால் காலாந்தரத்தில் மிக்க நன்மையும் உண்டாகக்கூடும் என்ற உணர்ச்சியால் அவர்களி

டம் விசுவாசமும் கொள்ளலானான் சந்திரகுப்தன். பிறகு அவன் அவர்களைச் சில கேள்விகள் கேட்டு அவர்கள் அளித்த விடையினின்றும் "பர்வதேசனது ஆட்களே அவர்கள்" என்பதைக் குறிப்பாய்த் தெரிந்து கொண்டு, தக்ஷணமே அவ்விடம்விட்டுச் செல்லுமாறு கண்ணால் சமிக்கை செய்தான். இவ்வணம் உயிர்ப்பிச்சையளித்த அவனிடம் அவர்கள் நன்றி உணர்ச்சிகாட்டி, மாறுவேடம் பூண்டு ஜனசந்தடியில் மெல்ல நழுவி விட்டனர்.

அவர்கள் தலை மறைந்ததும், சந்திரகுப்தன் நந்தர்களுக்கு ஆள் விடுத்து அவர்களுக்கு "உண்மை கண்டு பிடித்தாய்விட்டது" என்று அறிவிக்கச் சொன்னான். உடனே நந்தர்கள் சிங்கத்தைப் பற்றிய ரகஸ்யம் அறியப் பேராவல் கொண்டவர்களாய், ராக்ஷஸன், வக்ரநாசன், சுமதி முதலிய மந்திரிகளுடனும் புறப்பட்டு, சிங்கக்கூண்டு இருக்குமிடம் வந்து சேர்ந்தனர். வந்ததும், உண்மை அறிந்தவன் சந்திரகுப்தனென இருக்கக் கண்டு பிரமித்துச் சிலைபோல் நின்றனர். ஆயினும் தாம் பிரமித்தது, "சந்திரகுப்தனது சாமர்த்தியத்தைக் கண்டே" என்று யாவரும் நம்பும்படி அபிநயித்துக்காட்டி, அவன் வாய்மூலம் நிகழ்ந்த செய்தி யாவும் அறிந்தனர். "நல்லவேளையாய் "யாவரும் முழு மூடா" என நம் பகைவர் நினையாவண்ணம், இப்பரீக்ஷை நமது நகரத்திலாவது நிறைவேறியதே" என்ற சந்தோஷமும், அது சந்திரகுப்தனால் நடந்ததால், "ஐயோ! மஹா மதியூகியான சத்துரு மீண்டுவிட்டானே! இனி இவனை எங்ஙனம் கொல்வது?" என்ற துக்கமும் நந்தர்கள் கொள்ளலாயினர்.

இச்சமயம், வக்ரநாசன், சுமதி ஆகிய இருமந்திரிகளும், சந்திரகுப்தனது நிர்க்கதிக்கு இரங்கி, நந்தர்களுக்கே நலம் செய்பவர்கள்போலச் சிற்சில கூறி, "சந்திரகுப்தனைப் பிராமணபோஜனம் நடக்கும் அன்ன சத்திர மேல் விசாரணை செய்வோனாக நியமித்தால், அவன், பல காரணங்களால், தனக்குக் கேடு தானே தேடிக்கொள்வான்" என்று அவர்கள் நம்புமாறு கூறினர். ராக்ஷஸனும் இவ்விருவர் சொல்லியதையும் ஆகரித்தே பேச, நந்தர்களும் அதற்கிணங்கி அவ்வாறே செய்தனர்.

பிறகு, ராக்ஷஸன், "நம்மை அவமதிக்குமாறு கபடச்சிங்கம் கொண்டு வந்த ஆட்களைத் தக்கவாறு தண்டியாவிடில், அதனை

அனுப்பியோர்க்குப் புத்தி வாராது" என்று தீர்மானித்து அவ் வாட்களைத் தன்முன் கொண்டுவந்து நிறுத்துமாறு கட்டளையிட்டான். வேலையாட்கள் கூண்டுக்காவலரை வலைபோட்டுத் தேடியும் காணமுடியவில்லை. அவர்கள் எவ்வாறோ தப்பி ஓடிவிட்டார்கள் என்ற செய்தி ராக்ஷஸனுக்கு எட்டியதும் கோபததால் அவன் முகம் பொங்கியது. "நல்லதிருககட்டும்! அமாத்ய ராக்ஷஸன் ஒருவன் இருக்கிறான் என்பதை மமதையுள்ள மன்னாகள் மறநதுவிட்டார்கள் அல்லவா? அவர்களை இனி இலேசில் விடேன்" என்று கறுவிக் கொண்டே தன் வீடு நோக்கிச் சென்றான் ராக்ஷஸன்.

சிறையினின்றும் விடுபெற்ற சந்திரகுப்தன் கங்கா தீரம்சென்று தன் தந்தைக்கும் சகோதரர்க்கும் எள்ளும் நீரும் இறைத்துத் தனக்கேற்பட்ட அன்ன சத்திராதிகாரத்தைக் கூடியவரையிலும் தவறின்றிச் செய்து வந்தான்.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

சோழவந்தரனூர் அரசஞ் சண்முகனார்

இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

தற் சிறப்புப் பாயிரம்.

திருத்தகு தெய்வத் திருவள் ளுவர்தாள்
வருத்தமறச் சென்னிமிசை வைத்துக்—கருத்திருத்தி
அன்னார் மறைப்பாட்டோ டியானுமரைப் பாட்டிசைப்பேன்
முன்"நே ரிசை"ப்பேர் மொழிந்து.

அரும்பத விளக்கம் முதலியன:— மறைப்பாட்டு-வேதப்பொருளடங்கிய செய்யுள்: தமிழ வேதமாகிய குறள், வருத்தம்-இடையூறு. அரைப்பாட்டு-(முற்பகுதியாகிய) பாதிச செய்யுள. முன்நேரிசை-முதன்மையாகிய நேரிசை வெண்பா வாலாகிய நூல்: (வள்ளுவர் நேரிசை), அலலது, முன்னின்று கேட்கும் வினாவிற்கு வள்ளுவரே உத்தரமாகக் கூறுவது போற் கூறும் செய்யுள் நூல்.

முதலாவது அத்தியாயம்.

கடவுள் வாழ்த்து.

(க) ஈசன்கண் மூட இருண்ட(து) உலகமென
மாசற்றார் கூறலென் கொல்? வள்ளுவரே!—பேசில்
அகரம் முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

(அ-ம் முதலியன):— என் கொல்-யாது காரணம். "ஈசன்கண்மூட உலகம் இருண்ட"து, விளையாட்டாக உமாதேவியார் பரமசிவன் கண்ணை மூடிய போது. முழுவரலாற்றையும் காஞ்சிப் புராணம், "திருக்கண் புதைத்த படலம்" கொண்டு அறிந்துணர்க.

(உ) நான்மறைநூல் கற்றும் நவின்றும் தலைஇழந்தார்
மான்மகனார் என்னேயோ? வள்ளுவரே!—நூன்முற்றக்
கற்றதனால்ஆய பயன்என்கொல் வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

(அ-ம் முதலியன):— நான்கு மறைகள்-இருக்கு, யஜுர், சாமம் அதர்வம் ஆகிய ௪ வேதங்கள்; நவின்றும்-(பிறர்க்கு) உபதேசித்தும்; மால் மகனார்-திருமாலினது குமாரராகிய பிரமதேவன். நூல் முற்ற-சாஸ்திர முழுதும்; வால் அறிவன்-மெய்யறிவுடைய கடவுள். தொழாஅர்-வணங்கார் (கொல்-அசை)

மால் மகன் தலை இழந்தது—"ஆதியில் ஐந்து தலைகள் பெற்றிருந்த பிரமன், ஒருகாலத்தில் தானே முதற்கடவுள் என்று செருக்குற்றான். பரமசிவன் அவன் கர்வத்தை அடக்க அவன் எதிரில் வந்த காலையில் அவனது ஐந்தாவது முகம் சிவனை "நீ எனது நெற்றியினின்றும் தோன்றியவன். ஆதலின் நீ முதல்வனாவதெங்ஙனம்?" என்று இகழ்ந்து கூற, சிவனுக்குக் கோபத்தால முகம் பொங்கியது. தக்ஷணமே அவரது அம்சமான வைரவமூர்த்தியால் அசிரம் கிள்ளி யெறியப்பட்டது" என்பதாம்.

(ங) சாதனுற ஏனோர், தமிழ்மா முனிமுதலாம்
மாதவத்தோர் வாழ்வதென்கொல்? வள்ளுவரே!—ஓதின்
மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

(அ-ம் முதலியன்):— ஏனோர்-(தவம் முதலியன செய்யாத) மற்றையவர்; தமிழ்மாமுனி-அகஸ்தியர்; மலர்மிசை ஏகினான்-பக்தர் மனமாகிய தாமரை மலரிடத்து (அவர்கள் நினைத்த மாத்திரத்தில் அவர்கள் குறித்த வடிவுடன் விரைந்து) செல்பவனாகிய கடவுள்; மாண்-பெருமை பொருந்திய; சேர்ந்தார்-இடைவிடாது நினைப்பவர்

"தமிழ்மாமுனி" — என்று ஆசிரியர் கூறியது அவர்க்குத் தமிழ் மொழியாகிய தம் தாய்மொழியிடத்துள்ள அபிமானத்தை விளக்கியுளது. தமிழப் புலவர்களுக்கு இத்தகைய அபிமானம் இயற்கையில் உள்ளது என்பதை "கலைமகள் வாழ்க்கை முகத்ததெனினும மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்" என்ற குமரகுருபரர் வாக்காலும், "வண்டமிழ் வாணர்ப்பிழைத்த வான்குடிபோல்..." என்ற புகழேந்திப்புலவர் வாக்கைக் கொண்டும் இன்னோரன்ன பிறர் வாக்காலும் தெளிக.

(௪) கல்லே புணையாக் கருங்கடலை நாவரையர்
வல்லே கடந்ததென்னோ? வள்ளுவரே!—சொல்லுங்கால்
வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

(அ-ம் முதலியன்):— கல்-கற்றூண்; புணை-தெப்பம்; நாஅரையர்-திருநாவுக்கரசு நாயனார்; வல்லே-விரைவாக; வேண்டுதல் வேண்டாமை இலான்-விருப்பு வெறுப்பற்ற கடவுள்; இடும்பை-துன்பம். சேர்ந்தார்-தியானிப்பவர்.

மருணீக்கியார் என்பவர் சைவராகப் பிறந்தும், ஒருகாலத்தில் க்ஷமணமதத்தைத் தழுவிப் பாராட்டும்படியான நிலையுற்றனர். இவரது சகோதரியான திலகவதியாரது நன்முயற்சியினாலும் சிவபக்தியாலும் இவர் கல்வழிப்பட்டு மறுபடியும் சைவந்தழுவி மேம்பாடுற்றார். இது பொறாத க்ஷமணர்கள், அவர்க்குப் பலவிதத்திலும் அரசனைக்கொண்டு கடுந்தண்டனை விதித்தனர். அவையாவும் இவரை ஏதும் செய்ய முடியாமற்போகவே, க்ஷமணர்கள் சினந்து இவரை ஒரு கற்றூணோடு சேர்த்துக்கட்டிக் கடலில் எறிய ஏற்பாடு செய்தனர். சிவன்மீது அப்பொழுது ஓர் பதிகம் பாடவே அக்கற்றூணே அவர்க்குத் தெப்பமாகி மிதந்து கரையேறற்கு ஏற்ற கருவியானது. ☞நாவரையர் வரலாற்றைப் பெரியபுராணத்தில் விவரமாக அறிக.

(௫) தந்தையார் தாளெறிந்தும், சாராமை என்னைவினை
மைந்தர் ஒருவர்க்கு? வள்ளுவரே!—நந்தும்
இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(அ-ம் முதலியன):— தந்தையார்-எச்சதத்தன் என்னும் அந்தணர். தாள்-பாதம், வினை-தந்தையைத் தாளெறிந்ததாலான பாபவினை. மைந்தர்-விசாரசருமர். இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு-கடவுளுடைய மெய்க்கீர்த்தியையே விரும்பிப் பலாபேக்ஷை கருதாது கருமம் புரிபவரிடத்தில். நந்தும்-மிகுந்து வருத்துகின்ற

தந்தைதாள் மைந்தன் எறிந்த வரலாறு:— விசாரசருமன் என்னும் அந்தணச் சிறுவன், இடையனொருவன் பசுமந்தையை இரக்கமின்றி அடித்து ஓட்டிச் செல்வதை ஒருநாள் கண்டு வருந்தி, தானே அதனை இனி

மேய்த்து வர அனுமதி பெற்று மேய்த்து வந்தனன். இச்சிறுவன் காட்டி வந்த அன்பாலும் ஊட்டிய இரையாலும் பசுக்கள் அளவுக்குமிஞ்சிப் பால் அளித்தன. கன்றுகட்கும், ஆதரிப்போர்க்கும் முன்னிலும் அதிகமாகப் பால் சொரிந்தும் அவை மடிதாங்காது பால் சுரந்து கீழே வழிய விட்டு வந்தன. சிறுவன் மண்ணியாற்று மணலினால் தான் ஒரு சிவலிங்கம் உண்டாக்கி, அதற்கு வீணாகக் கீழ்வழிய இருக்கும் பாலைக் கறந்து, அபிஷேகஞ் செய்து வந்தான். சிறுவனது அந்தரங்கத்தை அறியாத அவனது தகப்பன் ஒரு நாள் இதைக் கண்டு அவன் பாலை வீணாக்குவதாக நினைந்து லிங்கத்தையும் பாற்குடத்தையும் காலால் எற்றி அவனைக் கோபித்தான். உடனே சிவபக்திமிக்க சிறுவன் வாள்கொண்டு தந்தைகாலை வெட்டிவிட்டான். சிவபிரான் அவனது பக்திக்கு மெச்சிச் சண்டேசுரபதம் அளித்தனர். ☞ விசாரசருமர் வரலாறு முழுமையும் பெரிய புராணத்தால் அறிக.

இன்னும் வரும்.

ம. கோ.

உ

ஐரோப்பிய யுத்தம்.

"நந்தவனத்திலோ ராண்டி"—என்னும் மெட்டு.

வந்ததே யூறப்பில் யுத்தம்—பிடி

வாதஅல் காதபோல் லாதகோர் யுத்தம்—வந்ததே......
—வெகு
தீரகம் பீரகிஷ் ரேமாம் யுத்தம்—வந்ததே............
—எமன்
சாய்த்துயிர் மாய்த்துக்கை காய்த்திடும் யுத்தம்—வந்ததே
—ஜெர்மர்
மூட்டப்பல நாட்டினர் கூட்டிடு யுத்தம்—வந்ததே.....

1. வஞ்சக ஜெர்மர்செய் யுத்தம்—இந்த
மண்டல முன்கண்ட யுத்தங்க ளெல்லாம்
பஞ்சாய்ப் பறந்திடும் யுத்தம—கொடும்
பஞ்சத்தை யுண்டாக்கும் வெஞ்சின யுத்தம்
—வந்ததே

2 பேயரைப் போல்வந்து ஜெர்மர்—நல்ல
பெல்ஜியக் காரரைப் பிடித்த யுத்தம்;
தாயரைப் போல்ஆங்கி லேயர்—கடல்
தாண்டி அவர் ரக்ஷை வேண்டிச்செய் யுத்தம்
—வந்ததே

3 மண்ணிலும் விண்ணிலும் யுத்தம்—கடற்
றண்ணீரின் மீதிலும் கீழிலும் யுத்தம்
எண்ணக் கொடியதாம் யுத்தம்—இதற்
கிடெங்கு மில்லாத பொல்லாத யுத்தம்—வந்ததே

4 *சந்திலும் பொந்திலும் யுத்தம்—ஜெர்மர்
தாழ்விஷக் காற்றினால் தாக்கிய யுத்தம்
இந்தியர் சேர்ந்துசெய் யுத்தம்—ஜெர்மர்
எய்திய கர்வத்தைக் கொய்திடும் யுத்தம்—வந்ததே

5. பக்ஷமில் லாமலே கெய்ஸர்—என்னும்
பாவி யரசன்றன் றேவிய யுத்தம
லக்ஷ்மண னன்பாடும் யுத்தம்—அங்கி
லேயாக்குத் தெய்வம்ச காயஞ்செய் யுத்தம்—வந்ததே

*Trenches.

தி. லக்ஷ்மண பிள்ளை B. A.,
Major Treasury Officer, திருவனந்தபுரம்.

விநோதக் கூற்று.

நோயாளி—வைத்தியரே! வயிற்றுவலி பொறுக்கமுடியவில்லை ஐயா!
வைத்தியர்—இதெல்லாம் உள்ளே பூசசி செய்யும் சேஷ்டை.
நோ— பூசசி தொலைய என்ன செய்யலாம்?
வைத்— கோழிக்கு பூசசி இரை. ஒரு குஞ்சை விழுங்கி விடுங்கள்.
நோ— பிறகு கோழியின் போக்கு?
வைத்— என்ன பிரமாதம்? பூனையைச் செலுத்துங்கள் ஐயா உள்ளே.
நோ— நல்ல யுகதி. பூனை மட்டும் எப்படி வெளிவரும்?
வைத்— அவசரப்படாதேயும். ஒரு எலியைப் பிடித்து, விழுங்கி—விடாதேயும், வாய்க்குள்ளே வைத்துக் கொள்ளும். பூனைக்கு எலி விருந்தல்லவா? அதைக் கவ்வ உடனே வெளிவரும். அசசமயம் பார்த்துப் பூனையை இழுத்தெறியும் வெளியிலே.

அயலூரிலிருக்கும் ஒரு தந்தை, தன் மகன் பல் வருஷங்களாக ஒரே வகுப்பில் கடைசிப்பையனாக இருததலை அறிந்து விசனிதது வேறு பள்ளியிற் சேர அவனுககு உத்தரவிடுகிறான். இரண்டொரு மாதங்கட் கெல்லாம், பையனின் கல்வி யபிவிருத்தியை அறிய ஆவலுற்ற தந்தைக்கு, அவன், தான் தன் வகுப்பில் இரண்டாவது பையனாக இருப்பதாக் அறிவிககிறான். தந்தை பழைய பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் மூடரெனறும, நல்லவேளையாய் இப்பொழுதேனும் வேறு பள்ளியிற்சேர்க்கத் தனககு யோசனை வந்ததே என்றும் எண்ணித் தன் மனைவியுடன் பையனின் அபிவிருத்தியைக் குறித்து மகிழ்கிறான். இப்பள்ளியிற் பையன் படிக்கும்வகுப்பிற் பயில்வோர்தொகை இரண்டே என்பது பெற்றோர்க்கு இன்னமும் தெரியாது. —

சமாசாரக்கொத்து.

தமிழகச் செய்தி.

(1) மதுரைத்தமிழ்ச்சங்கம்:—இதற்கு இராமநாதபுரம் ராஜா அவர்கள் மாதம் நூறுரூபாய் வீதம் வருஷத்துக்கு 1200 ரூ. தர்ம மகமை நிதியிலிருந்து, கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிற விஷய மறிந்து மகிழ்கின்றோம்.

(2) மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம்.— இச்சங்கத்தார் முன்னிட்டுப் பொதுஜன நன்மைக்காக, திருப்பாதிரிப்புலியூர் பண்டிதை ஸ்ரீமதி, அசலாம்பிகை அம்மையவர்கள், பண்டித ஸ்ரீ மகோபாலகிருஷ்ணையரவர்கள் அக்ராஸநதின்கீழ், மதுரைக் காலேஜ் ஹாலில், "கல்வி" என்பதை பற்றி ஒரு மஹோபந்யாஸம் செய்தார்கள். அன்று கூடிய கூட்டத்தில, சுமார் நூறு பெண்மக்களும், ஐந்நூறு ஆண்மக்களும் வந்திருந்தார்கள். அம்மையவர்கள் பிரசங்கத்தை வியந்து பலர் பேசினர். சிலர் சிறப்புக் கவிகள் கூறினர். அச்சிறப்புக்கவிகள் அடுத்த பத்திரிகையில் வெளிவரும்.

(3) எட்டயபுரம் ராஜா அவர்களின் உயர்தர கலாசாலையைச் சார்ந்த மாணவர் சங்கம்.— இச்சங்கம் எங்கள் மஹாராஜா அவர்களின் உதவியைப் பெற்றது; தலைமையாசிரியர் ஸ்ரீ T. கிருஷ்ணசாமி ஐயங்கார் B. A. L. T. அவர்களையும் உபாத்யாயர் ஸ்ரீ H. சுந்தரமையர் அவர்களையும் தலைவராகவும் உதவித்தலைவராகவும் கொண்டது. தமிழறிவு வளர்ச்சியே இச்சங்க நோக்கம் இந்நோக்கம் இனிது நிறைவேற இக்கலாசாலைப் பண்டிதர்களாகிய ஸ்ரீ: ரங்கையங்கார், குருஸாமி தீக்ஷிதர் முதலியோர் தம்மால இயன்ற உதவி புரிந்து வருகின்றனர்.

கல்வி, உண்மை, தமிழ்ப்பெருமை, குருபக்தி, கோதிலாமனம் முதலிய விஷயங்கள் இதுகாறும் பிரசங்கிக்கப்பட்டிருக்கின்றன. செந்தமிழ், விவேகோதயம், விவேகபோதினி, சுதேசமித்திரன், ஜீவகாருண்யம்-முதலியன இச்சங்கத்திற்கு வருவிக்கப்படுகின்றன கூட்டந்தோறும் முதலிற் கடவுள் வாழ்த்தும பிறகு வியாஸமும் முடிவில் பரிபாலகர் வாழ்த்தும, அரசவாழ்த்தும் கூறப்படுகின்றன. சென்ற நாலைந்து மாதங்களாக இனிது நடைபெற்றுவரும இச்சங்கம் நீடுவாழ்க.—சங்கரபிமானி.

தேவகோட்டை வைசிய சிவானந்த சபை:—இதன் 3-ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் நெல்லை வக்கீல் ஸ்ரீ N. A. V. சோமசுந்தரம பிள்ளையவர்களின் அக்ராஸனத்தின்கீழ் இமமாதம் 21, 22, 23உ களில் நன்கு நடை பெற்றது.

ஓர் நன் கொடை:—இனி "அண்ணாமலைக் காலே"ஜாக இருக்கும் மதுரைக் காலேஜுக்கு தேவகோட்டை ஸ்ரீ சு. ப. கு. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் 5000 ரூ. ஸ்ரீ S. R. M. M. A. அண்ணாமலை செட்டியாரவர்கள் மூலம் நன்கொடை யளித்ததறிந்து மகிழ்கிறோம். பிறரும் இவருடைய நன்மாதிரியை முன்மாதிரியாகக் கொள்வாராக.

பூவாளூர் சைவ சித்தாந்த சங்கம்:— மார்கழி 4, 5உகளில் நடைபெறும இச்சங்கத்தின் 6-ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்ட காலத்தில் ஆண்டிப்பட்டி ஜமீந்தாரும் நம் சங்கப்பரிபாலப் பிரபலருமான ஸ்ரீ M. C. T. பெத்தாச்சி செட்டியார் அவர்கள் M. R. A. S. அக்ராஸநம் வகிப்பர். பல வித்வான்கள் உபந்யாசம் புரிவார்கள்.

மாற்றுப் பத்திரிகைகள்:— விவேகபோதினி, வித்தியாபாநு, செந்தமிழ், பூர்ண சந்திரோதயம், பாண்டிய நேசன், கமலாலனி, சண்முகநாதன், பிரஜாநுகூலன், கிருஷிகன், வைசியமித்திரன், நாகைநீலலோசனி நமக்கு அனுப்பப்பட்டுள. நாம் கேட்கு முன்ன மேயே தம் பத்திரிகைகளை நமக்கு அனுப்பியதன நிமித்தம் அனுப்பியோர்க்கு நன்றி கூறுகிறோம். பிறரும் அனுப்புமாறு வேண்டுகிறோம்

புத்தகக்குறிப்பு:— நளினசுஷி, ஆத்திசூடி நீதிக்கதைகள், வரசுல்கம், மாலினி மாதவம், திருமலைநாயக்கர் சரித்திரம், மங்கம்மாள் சரித்திரம், முதலிய புத்தகங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றைப்பற்றிய அபிப்பிராயம் அடுத்த பிரதியில் வரும்.

இராமநாதபுரத்தில் வக்கில் வேலை பார்த்து வந்த ஸ்ரீ N. V. சுந்தரராஜையர் அவர்கள் B. A. 100 ரூபாய் சம்பளத்தில மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் மூன்றாவது காரியதரிசியாகவும் "செந்தமிழ்"ப் பத்திரிகையின் அதிபர்களுள் ஒருவராகவும நியமிக்கப்பட்டிருப்பதறிகிறோம் போதிய வருவாயின்றியும், மாணவர்கள், உபாத்தி

யாயர்கள் முதலியோர்க்குக் குறித்த காலங்களில் சம்பளம் கொடு படக் கூடாமலும் இருக்கும் இக்காலேயில், மாதம் 100 ரூ செல வழிக்க இச்சங்கத்தார் துணிந்தது ஆச்சரியமே!

ஒரு மோசக்கார மாணுக்கன்:— பெங்களூரில் ஹனுமந்த ராவ் என்னும் ஒருமாணுக்கன ஸ்கூல் பைனல் பரீட்சைக்குச் சென் றுன்; அது காரணமாகத தனது சர்டிபிகேட் புஸ்தகத்தில் எழுதப் பட்டுள்ள மார்க்குக்களைத் திருத்தி விட்டனன். அக்குற்றததிற காக அவன் 5 வருஷகாலம் ஸ்கூல் பைனல் பரீட்சைக்குப் போதல் கூடாதென்று கல்வியிலாகா அதிகாரிகளுத்தரவு செயதிருக்கின் றனர்.

ஸ்திரீகளின் ராஜ விசுவாசம்.— கொச்சியில் வசிக்கும் ஸ்திரீ களுள் பலர் யுதத நிதிக்காக 1500 ரூபாய் வரையில் வசூல் செய் திருக்கின்றனர்.

ஓர் நன் கொடை:— திருச்சிக்கோட்டை, பெண்கள் ஹை ஸ்கூல் கட்டிடத்தைக் கட்டுவதற்கு சென்னை கவர்ண்மென்ட் 31,314 ரூபாய் கொடுத்திருக்கிறுர்கள்.

வெகு காலம் ஸ்கூல் இன்ஸ்பெக்டராக இருந்தவரும் பள்ளிக் கூட புஸ்தகங்கள் பல இயற்றியவரும், சங்கீத சுர புஸ்தகங்களை வரைந்தவருமாகிய ராவ்பகதூர் வி. நாகோஜிராவ் இம்மாதம் 13உ காலஞ்சென்ற செய்தி கேட்டுவிசனிக்கிறோம்.

காஞூகோத்தான் மிஸ்டர் C. T. முத்தையா செட்டியார் பம் பாய்க்குச் சென்றிருந்த போது அங்கே வந்திருந்த "மதிராஸ்" ஆஸ்பத்திரிக் கப்பலைப்போய்ப் பார்த்து அதில் இருப்பு வஸதிகள் இன்னும் அதிகப்படுத்தும் நிமித்தம் 2,000 பவுன் கொடுத்தா ரென அறிகிறோம்.

யுத்தமாரம்ப மாவதற்கு முன் 500ரூபாய் வீதம் விற்கப்பட்டு வந்த சாயப் பீப்பாயின் தற்காலவிலே 5000 ரூபாய்.

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸ், திருமங்கலம்.